# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச் உலக தலைமையகம்

மெட்ரோபாலிட்டனின் அலுவலகம், செயின்ட் தாமஸ் சமூகம், குட்டப்புழா அஞ்சல், திருவல்லா - 689103 கேரளா, இந்தியா.689103.

# மேய்ப்பனின் கடிதம்

**ஆகஸ்ட்/செப்டெம்பர் 2024**

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே எல்லா பேராயர்கள், குருமார்கள், டீக்கன்கள், இவான்ஞ்சலிஸ்ட்கள், சிஸ்டேர்ஸ் ஆப் கிராஸ், மற்றும் உலகமெங்கிலும் உள்ள பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் திருச்சபையின் அனைத்து விசுவாச மக்களுக்கு எனது ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் ஆமென்✠.

கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே,

பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்சின் பிதாவாக மற்றும் மெட்ரோபாலிட்டனாக அரியணை ஏறிய பிறகு இது நான் உங்களுக்கு எழுதும் முதல் மேய்ப்பனின் கடிதம் ஆகும். என் மீதுள்ள உங்கள் அன்புக்கும், ஜெபத்திற்கும் நான் எவ்வளவு நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்று சொல்லி ஆரம்பிக்கிறேன். மேலும் நமது பரலோகத் தகப்பனுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், ஏனென்றால் நம் எல்லோருக்கும் அவர் மிகவும் உண்மையுள்ளவராக இருந்தார், மற்றும் குறிப்பாக சமீப காலமாக அவரது அன்பு, எவ்வளவாய் நம்மை வழிநடத்தியது!

இந்த கடிதத்தில், சில முக்கியமான காரியங்களை கூறி உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**முதலாவதாக:** அக்டோபர் 2024 இல் நடைபெற உள்ள **வாலிபர் கூடுகை**.

இளைஞர்கள் தான் நமது திருச்சபையின் எதிர்காலம். அவர்கள் ஆவிக்குறிய ரீதியில் வலுவாகவும், துடிப்பாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்தால் திருச்சபைகள் மற்றும் சமூகங்கள், குறிப்பாக நமது திருச்சபையின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும். அத்தகைய நோக்கத்துடன் 2024 அக்டோபரில் நடைபெறும் வாலிபர் கூடுகைக்கு திட்டமிட்டு ஆயத்தப்படுத்தி ஜெபித்து வருகிறோம். பல்வேறு பேராயங்களிலிருந்து பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட வாலிபர் குழு கூடும் இத்தகைய வாலிபர் கூடுகைக்காக ஜெபியுங்கள்.

உங்கள் குடும்ப ஜெபங்களில் இந்த நிகழ்வுக்காக ஜெபியுங்கள்; மேலும் வாலிபர்கூடுகை நடந்து முடியும் வரை உங்கள் திருச்சபையில் ஜெபகூட்டங்களை திட்டமிடுங்கள். பங்கேற்பாளர்களின் பாதுகாப்பான பயணம் மற்றும் அனைத்து ஆயத்த ஏற்பாடுகளும் நிறைவடையவும், இக்கூடுகையில் நமது வாலிபர்கள் பரிசுத்த வாழ்க்கைக்கான விழிப்புணர்வடையவும் ஜெபம் செய்யுங்கள்.

**இரண்டாவதாக:** கர்த்தராகிய இயேசு, அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்ற வார்த்தைக்கேற்ப. நமது திருச்சபையிலிருந்து

பயிற்சி பெற்று பரிசுத்த திருச்சபையில் ஊழியம் செய்ய தங்கள் வாழ்க்கையை அற்பணிக்கதக்க நிறைய வாலிப சகோதர சகோதரிகளுக்கான மிகபெறும் தேவை இருக்கிறது, (பரி. மத்தேயு 9:36-38) ஆகவே, இது நமது எல்லா ஜெப கூட்டங்களிலும் ஆண்டு முழுவதும் திருச்சபை மற்றும் குடும்ப ஜெபங்களின் விண்ணப்பமாக இருப்பதாக. நீங்கள் ஒரு பெற்றோராக இருந்தால், உங்கள் பிள்ளைகள் தேவனுக்கு ஊழியம் செய்ய தங்கள் வாழ்வை அற்பணிக்கும்படி ஜெபியுங்கள். முதலில் நாம் உதாரணமாக இருப்போம், மற்றவர்கள் அதைப் பின்பற்றுவார்கள்.

**மூன்றாவதாக:** நமது மேஜர் செமினரி, பேராய செமினரிகள் மற்றும் சிஷ்டர் ஆப் கிராஸ் சகோதரிகளுக்கான புதிய கல்வி அமர்வுகள், பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அப்படிபட்ட பயிற்சியை பெரும் அன்பான சகோதர சகோதரிகள் தேவனுக்கு சேவைசெய்ய படிக்கவும், பயிற்சிபெறவும், ஆயத்தபடவும் தங்களை அற்பணிக்கும்படி அவர்களுக்காக ஜெபம் செய்யுங்கள்.

**நான்காவதாக:** பரிசுத்த திருச்சபையின் நிதித் தேவைகளுக்குக் கொடுப்பதில் தொடர்ந்து உண்மையுள்ளவர்களாக இருப்போம். பரிசுத்த பவுல் மக்கதோனியாவில் உள்ள சபையை நமக்கு நினைவூட்டுகிறார், இவர்கள் ஆழ்ந்த வறுமையின் மத்தியிலும், தங்கள் திரானிக்கு மேல் கொடுத்தார்கள் (2 கொரி 8:1-5). நமது பரிசுத்த திருச்சபையும் அப்படிப்பட்ட ஒன்றாக இருக்கட்டும் "தனக்கிருந்த அனைத்தையும் கொடுத்த" ஏழை விதவையைப் போலவே தாராளமாகவும், உதாரத்துவமாகவும், உண்மையாகவும் இருப்போம் (பரி. மாற் 12:41-44). உதாரத்துவமாய் கொடுப்பவரிடம் தேவன் பிரியமாக இருக்கிறார் (2 கொரி 9:6, 7), இப்படிபட்ட வாக்குதத்தங்களை நினைவில் கொள்ளுங்கள். நாம் கர்த்தருக்குக் கொடுக்கும்போது, அவர் வானத்தின் பலகனிகளை திறந்து இடங்கொள்ளாமல் போகுமட்டும் ஆசீர்வாதங்களை நம் மேல் வர்ஷிக்கப்பண்ணுவார். (மல்கியா 3:10, 11).

அன்புள்ள பிள்ளைகளே, நான் முடிபதற்கு முன், ஒரு திருச்சபையாக நமது நாடு, மாநிலம் மற்றும் பகுதியின் தலைவர்களுக்கு ஜெபிப்பது நமது பொறுப்பு என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன் (I தீமோ 2:1-4). அதை உண்மையாக செய்வோம். வன்முறை மற்றும் உறுதியற்ற தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் நாட்டிற்காக- அங்கு அமைதிக்காகவும், உறுதிதன்மை விரைவில் திரும்ப ஜெபம் செய்வோம். இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிருஷ்டி கர்த்தர் உதவி செய்யும்படி அவர்களுக்காகவும் வேண்டிக் கொள்வோம்.

இறுதியாக, அன்பான சகோதர சகோதரிகளே, இளைப்பாறுதலில் இருக்கும் நமது மறைந்த முதலாம் மெட்ரோபாலிட்டன், ஆசீர்வதிக்கப்பட்ட அத்தனாசியஸ் யோஹான் அவர்களை நினைக்கும்போது, அவர்கள் அடிகடி சொல்லுவது **அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் நமது வரைபடமாகும்;** அது நாம் செல்வதற்கான திசைகாட்டி, நமது ஆர்த்தடாக்ஸ் விசுவாசத்தின் அடிப்படை வழிகாட்டி. இந்த புத்தகத்தை அடிக்கடி படியுங்கள்; அவற்றின் கொள்கை கோட்பாடுகளை தனித்தனியாக, ஒரு கூட்டமாக, மற்றும் ஒரு திருச்சபையாக ஒன்றாக பயன்படுத்துவோம் .

நாம் முன்னேறிச் செல்லும்போது, பரிசுத்த திருச்சபையின் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மீது நம் கண்களை நிலைநிறுத்துவோம். தினசரி தேவையான வல்லமை

மற்றும் உத்வேகம், பெற்று அவருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ முற்படுவோம். தொடர்ந்து பரிசுத்த ஆவியானவர் அவரை நேசிப்பதற்கும், சேவை செய்வதற்கும் நமது ஊழியத்தில் நமக்கு வழிகாட்டவும், நமது முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவும், நீடித்த பலன் பரிசுத்த திரித்துவத்திற்கு, துதியும், கனமும் பயபக்தியும் மகிமையையும் மாட்சிமையும் தருவதாக- பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கு இப்போதும் எப்போதும் மகிமை உண்டாவதாக✠.

**கிறிஸ்துவுக்குள் உங்கள் பிதா,**

ST. THOMAS NAGAR, KUTTAPUZHA P.O. BELIEVERS EASTERN CHURCH THIRUVALLA - 3 - KERALA

**தேதி: 12 ஆகஸ்ட் 2024**

**மோரான் மோர் சாமுவேல் தியோபிலஸ்**
**மெட்ரோபாலிட்டன்**

**இடம்: உலக தலைமையகம்**